தீதும் நன்றும் பிறர் தரவாரா....

-கலாநிதி க.ஞானரெத்தினம்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது ஔவையின் அமுத மொழி. இதன் மூலம் மானிடப்பிறவி எவ்வளவு மகத்தானது என்பதனை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. சுவாமி விவேகானந்தர். "மனிதனே மேலானவன். எல்லாமிருகங்களை விடவும். எல்லாத் தேவர்களை விடவும், மனிதன் உயர்ந்தவன். மனிதனைவிட உயர்ந்தவர் யாருமே இல்லை என மனிதனின் பெருமையை கூறுகின்றார். நாம் மனிதனாக பிறந்தது மட்டுமல்ல, கூன், குருடு, செவிடு, பேடை நீங்கி முழுமையாக பிறந்திருக்கின்றோம். இது எமக்கு இறைவன் கொடுத்த வரமாகும். நாம் இறைவனின் குழந்தைகள் அல்லவா. அப்படியென்றால் பிறக்கும் போதே நாம் நல்லவர் களாகவும் வல்லவர்களாகவும் தானே பிறந்திருக்கவேண்டும். இதற்கேற்ப நமது வாழ்வும் வளமானதாக இருக்க வேண்டும். நமது இன்பமும் துன்பமும், சுகமும்- நோயும், வெற்றியும் - தோல்வியும், சாதனையும்- சோதனையும் இன்னொருவரால் தரப்படுவதல்ல. இது நம்மாலே நமக்கு ஏற்படுத்தப்படுகின்றது. . எம்மை படைத்த இறைவன் நமக்காக இயற்கையையும் அத்துடன் பல உயிரனங்களையும் படைத்திருக்கின்றான். நமக்கு வேண்டிய அனைத்தும் இவ் உலகிலே படைக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் இன்று முழு உலகிலும் பிரச்சினைகளும் நோய்களும் மலிந்தே காணப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பிரச்சினைகள். விஞ்ஞானம் தொழினுட்பம் என்பன இமயத்திற்கு சென்று கொண்டிருக்கின்றன என பெருமை பேசுகின்றோம். ஆனால் மனித மனங்களிலே "அமைதி" இல்லை. இது ஏன்? இதற்கெல்லாம் காரணகர்த்தா யார்? என்று ஆராயும் போது, மெய்யானிகளின் ஒரே விடை, அது வேறு யாரும் இல்லை நாமேதான்" என்பதாகும்.

நல்வழிப்படுத்தும் மதங்களும், அவதார புருசர்களும் மீண்டும் மீண்டும் இதனையே கூறிக்கொண்டிருக்கின்றனர். மனித வாழ்வில் நமக்கு மிகவும் அவசியமானவைகளாக உணவு உறக்கம், உறவு, உழைப்பு உள்ளல்(எண்ணம்) ஆகிய ஐந்தும் கருதப்படலாம். இவை சீராகவும் சிறப்பாகவும் அமையும் போது நாம் மகிழ்ச்சியாக வாழமுடியும். மாறாக இவை அளவுக்கு அதிகமாகவும் சீரற்றதாகவும் அமையும் போது எமது வாழ்வே துன்பமாகி விடும். உதாரணமாக உணவு எமக்கு உயிர்வாழ்வதற்கு அவசியமானதாகும். இது இல்லையேல் நாம் வாழ முடியாது. மாறாக இது அளவுக்கு அதிகமாக இருந்தாலும் எம்மால் மகிழ்ச்சியாக வாழமுடியாது. இன்று உலகில் உணவு இல்லாமல் துன்பப் படுபவர்களைக் காட்டிலும் மிதமிஞ்சிய உணவால் துன்பப்படுபவர் அதிகமானோர் ஆவார். இதே போன்று தான் மேல் குறிப்பிடப்பட்ட ஐந்து விடயங்களும் அமைகின்றன. இந்த ஆக்கத்தின் பிரதான வாசாகராக கல்விச் சமூகம் இருப்பதால். அவர்களை பொறுத்தவரை மிக முக்கியமானதாக கருதப்படும் "எண்ணம்" இங்கு சற்று பொலிவு பெறுகின்றது.

Gnanam Gnanam Gnanam Gnanam

உளவியல் சார் ஆய்வுகளிலே மனித நடத்தையில் "எண்ணங்கள்" பெரும் செல்வாக்கு செலுத்துவதாக அறியப்பட்டுள்ளன. சுவாமி விவேகானந்தர் "எண்ணமே வாழ்வு" என்று ஒரு வார்த்தையிலே கூறிவிட்டார். மேலும் மகாகவி பாரதியார் "நினைவு நல்லது வேண்டும்" என்கின்றார். எமது உள்ளத்திலே தோன்றும் எண்ணங்களே எமது வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றன. பானையில் இருப்பது தானே அகப்பையில் வெளிவரமுடியும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது போல ஒருவரது செயற்பாடுகள் அவரது உள்ளத்தை படும்பிடித்துக்காட்டி விடுகின்றன. இன்சொல் பேசுதல், வாய்மை காத்தல், பொறுமை பேணல், பெரியோருக்கு உதவுதல். உயிர்களை நேசித்தல், புறம் கூறாமை, தானதருமம் செய்தல் என்பனவையெல்லாம் எமது எண்ணத்தின் வெளிப்பாடுகளாகும். மாணவர் ஒருவரின் கடமை கல்வி கற்பதாகும். கல்வி தொடர்பாக அம்மாணவன் கொண்டுள்ள எண்ணத்தின் அடிப்படையிலே அதன் விளைவும் தங்கியிருக்கும். கல்வி மாபொரும் செல்வம். கல்வி கற்றால் கௌரவமாக வாழலாம். கல்வி மூலம் சீரும் சிறப்பும் கிடைக்கும். கற்றே ஆகவேண்டும், இல்லையேல் வேறுவழி இல்லை, போன்ற உயரிய எண்ணங்கள் மாணவருக்கு இருந்தால் அவரது கற்றல் செயற்பாடும் உயிரோட்டமாக இருந்து விளைவும் நிறைவாக அமையும். ஆகவே மாணவர்களுக்கு கல்வி - கற்றல் தொடர்பாக உயர் எண்ணங்களை விதைக்க வேண்டியது பெற்றோர். ஆசிரியர், சமூகத்தின் கட்டாய கடமையாகும்.

அதே போன்றுதான் ஆசிரியர் ஒருவர் தனது தொழில் தொடர்பாக உயர் எண்ணம் கொண்டவராக இருந்தால் அவர் வெற்றிகரமான கற்பித்தலை நடாத்தும் ஒருவராக இருப்பார். இல்லையேல் பாடசாலையில் பிரச்சினையின் சொத்தாகவே அவர் அமைந்துவிடுவார். தொலைக்காட்சி அல்லது தொலைபேசியில் கூடுதலான ஈடுபாடு கொண்ட மாணவன் ஒருவன். புத்தகத்தை புரட்டினால் சற்று நேரத்தில் நித்திரையாகிவிடுவான். தொலைகாட்சி, அல்லது தொலைபேசி தொடர்பாக மாணவனின் எண்ணத்தின் வெளிப்பாடே இதுவாகும். குறித்த மாணவன் கல்வியை விட தொலைகாட்சியை அதிகம் நேசிக்கின்றான். இதனால் அதில் கவர்ச்சியைக் காண்கின்றான். ஒரு மாணவன் கல்வியை நேசிக்கத் தொடங்கி விட்டால், இரவு - பகலாக சலிப்பின்றி கற்க முடியும். அவ்வாறாயின் இந்த உலகமே எதிர்காலத்தில் அவனை தலைவணங்கும்.

மாணவர்களே நீங்கள் மாபெரும் வளம், எதிர் கால தலைவர்களும் நீங்கள் தான். இன்று உங்கள் கண்முன்னே காண்கின்ற ஒவ்வொரு மேதைகளும். ஆரம்பத்தில் உங்களைப் போல் மாணவனாக இருந்தவர்களே. பாடசாலைக் காலத்தை நீங்கள் "வளமான வாழ்வுக்கான ஓர் களமாக" பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் முழு சிந்தனையும் உங்கள் இலட்சியத்தின் மீதே இருக்க வேண்டும். உலகிலே தேவையற்ற கவர்ச்சிகளின் பால் நாட்டம் கொள்ளாது கற்றலுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். உங்கள் கனவாகிய வைத்தியர். பொறியலாளர், சட்டத்தரணி, நல்லாசான் எதுவாயினும் நிச்சயம் நிறைவேறிவிடும். ஆபிரகாம்லிங்கன், அயன்ஸ்டின், மார்க்கோணி. அப்துள்கலாம் யாவரும் கஷ்டமான சூழ்நிலைகளில் பிறந்து சாதனை படைத்த வெற்றியாளர்கள்.

நாம், எமது பலவீனங்களைச் சிந்திப்பதை தவிர்த்து. இறைவனால் கொடுக்கப்பட்ட சிந்தனை, புலன்கள், நேரம், இயற்கை வாய்ப்புகளைப் பயன்படுத்தி முன்னேறுவதற்காக எமது எண்ணத்தை உயர்வாக வைத்துக் கொள்வது அவசியமாகும்.. இலட்சியத் தின் மீது ஆசையை வளர்த்து . செயற்பாட்டை உறுதியுடன் பின்பற்றி . காலத்தை உயர்வாக பயன்படுத்தி. காரியத்தை சரியாக திட்டமிட்டால், அவ்வாறாயின் நாம் ஒவ்வொருவரும் நிட்சயம் நாளைய தலைவர்தான்.

ஒருவருக்கு மூன்று நடை இருப்பதாக திருமுருக கிருபானந்தவாரியார் கூறுவார். மனநடை, நா நடை, கால் நடை என்பனவே அவை. மனநடை என்கின்ற எண்ணம் நன்றாக இருந்தால், நா நடை என்கின்ற இன்சொல் சிறப்பாக இருக்கும் எனவும். இந் நா நடை நன்றாக இருந்தால் கால் நடை என்கின்ற வாழ்வு மகிழ்வாக இருக்கும் எனவும் அவர் விளக்குகின்றார். இதிலிருந்து எமது வாழ்வு சிறக்க வேண்டுமாயின் எண்ணம் நேராக இருக்க வேண்டும் என்பதனை நாம் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆகவே நமது துன்பம், இன்பமும் இன்னொருவரால் தரப்படுவதில்லை. இவை நமக்கு நம்மாலே ஏற்படுத்தப்படுபவையாகும். அவ்வாறாயின் நல் வாழ்விற்கு அடிப்படையாக விளங்கும் நல்ல எண்ணங்களை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும் நாம் பிறக்கும் போது எண்ணங்களுடன் பிறக்கவில்லை. வயதாகும் போது அவை நம்மை பிடித்துக் கொண்டவையாகும். நமது கல்வி, அனுபவம், சூழல் இவை காரணமாக எமது எண்ணங்கள் எம்மை பற்றிப் பிடித்துள்ளன. எதுவாயினும் இனிவரும் காலத்தில் நாம் நேர் எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு எமது அன்பு மதங்களும், அற நெறிக்களும், மெய்ஞானிகளும் வழிகாட்டுகின்றனர். நல்லார் தொடர்பு, நல்ல நூல்களை வாசித்தல், வழிபாடு மற்றும் சேவை என்பனவற்றினுடாக நாம் உயர் எண்ணங்களை ஏற்படுத்திக்கொள்ள முடியும். பகவத்கீதை, திருக்குறள், திருக்குறான் பைபிள் என்பன எல்லாம் எமக்கு நல்ல எண்ணத்தை விதைக்கும் பொக்கிசங்களாகும். ஒவ்வொருவரும் தினசரி மேலுள்ளவற்றில் ஏதாவது ஒன்னை சில நிமிடங்களாவது வாசிக்க வேண்டும். இதன் மூலம் எம்மிடையே படிப்படியாக நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ள முடியும் நல்ல எண்ணங்களினூடாக நாம் உயர்வாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு வாய்ப்பு ஏற்படும். எம்மிடையே இருக்கின்ற அசுரர்களாகிய கோபம். பொறாமை, பொய்மை, கர்வம் போன்றவை எம்மைவிட்டு நீங்கி நாம் தேவ குணம் கொண்டவராக மாறிவிடுவோம். அவ்வாறாயின் எமது வீடும் பாடசாலையும் எமது குடும்பமும் மகிழ்ச்சியான எல்லைக்கே செல்ல வாய்ப்பு ஏற்படும்.

(பதிப்புரிப்புரிமை உடையது)

Gnanam Gnanam Gnanam Gnanam